# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,108 — 1964 ජූලි 17 වැනි සිකුරාදා — 1964.7.17**

14.108 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு யூலை மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

**[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 199 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 204 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 208 | நாணயவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### வித்தியா பகுதி

**ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை**

**(ஆங்கில பயிற்சி), 1964**

ஆங்கில உதவி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஒரு புதிய பயிற்சிவகுப்பு, 1965 ம் ஆண்டு ஆரம்பமாகும். பயிற்சிக் காலம் இரண்டு வருடங்களாகும். இப்பயிற்சி வகுப்பினைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்வோருக்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கப்படும். 3 வருட திருப்திகரமான சேவையின் பின் இவ்விரண்டாம் வகுப்புப் பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திரங்கள் I ம் வகுப்புக்கு உயர்த்தப்படும்.

**2. சம்பளம்**

பயிற்சியைத் திருப்திகரமாக முடித்து ஆசிரியராக நியமனம் பெறுவோர் பின்வரும் சம்பள விகிதத்தைப் பெறுவர் :—

ரூ. 1,056 — 2 × 72 — ரூ. 1,200.

தராதரப் பத்திரம் I ம் வகுப்புக்கு உயர்த்தப்பட்டதும் சம்பள விகிதம் பின்வருமாறு அமையும் :—

ரூ. 1,272 — 14 × 72 — 6 × 120 — ரூ. 3,000.

**3. பயிற்சிக் கலாசாலையிற் சேர்தல்**

(i) கலாசாலையில் சேர்ந்து இரண்டு வாரங்களுக்குள் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இரண்டு வருடச் சம்பளமும் அதனோடு சேர்ந்த அக்கால விசேட வாழ்க்கைப்படிகளுக்குச் சமமான ஒரு தொகைக்கு உறுதிப்பத்திரமொன்று செய்துகொள்வதற்குவேண்டிய எல்லாப் பத்திரங்களையும் கலாசாலை அதிபருக்குச் சமர்ப்பித்து இவ்வுறுதிப்பத்திர மூலம் பரீட்சார்த்தி பின்வருவனவற்றிற்குக் கட்டுப்படல் வேண்டும் :—

(அ) பயிற்சிக் காலத்தில் அரசியல் விடயங்களில் பங்குபற்ற மாட்டாரெனவும் ;

(ஆ) எக்காரணங்களையிட்டும் பயிற்சிக் காலத்தில் பயிற்சியை விட்டு விலகமாட்டாரெனவும் ;

(இ) பயிற்சிக் காலம் முடிந்ததும் வித்தியாதிபதியால் ஆசிரியராக எப்பாடசாலையிலோ அல்லது பாடசாலைகளிலோ நியமிக்கப்பட்டால் தொடர்ந்து எட்டு வருடகாலத்திற்குச் சேவைசெய்வாரெனவும் ;

(ஈ) உறுதிப்பத்திரத்தில் கூறப்பட்ட காலம் முடிவதற்குள் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில் வேறு தொழில்களுக்கு அல்லது கல்விக்காக லீவுக்கு விண்ணப்பிக்க மாட்டாரெனவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ii) ஒரு பயிற்சியாளர் பயிற்சி பெறுங்காலத்தில் அவரது நடத்தை, கல்வியில் அக்கறை எடுத்தல் முதலிய விடயங்களில் கல்லூரி அதிபரைத் திருப்திப்படுத்தத் தவறினால் அவர் மேற்படி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர். இவ்விடயத்தில் வித்தியாதிபதியின் தீர்ப்பே முடிவானதாகும்.

**4. பரீட்சைத் திகதி**

இப்பரீட்சை 1964 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ந் திகதி, சனிக்கிழமை நடைபெறும்.

### முக்கிய விளம்பரம்

*1964 ம் ஆண்டு ஆடி (யூலை) மாதம் 22 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1964 ம் ஆண்டு ஆடி (யூலை) மாதம் 24 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1964 ம் ஆண்டு ஆடி (யூலை) மாதம் 18 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

**பேர்னுட் த சில்வா,**
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1964 ம் ஞூ ஆடி (யூலை) மீ 10 ந் உ.*

5. **பரீட்சை ஸ்தானங்கள்**

(i) இப்பரீட்சை பின்வரும் நிலையங்களில் நடைபெறும் : கொழும்பு கம்பகா, களுத்துறை, அனுராதபுரம், மட்டக்களப்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, நுவரேலியா, காலி, மாத்தறை, தங்காலை, வதுளை, மொனருகலை, குருநாகல், சிலாபம், அம்பாறை, கல்முனை, திருக்கோணமலை, பொலன்னறுவா, யாழ்ப்பாணம், வவுனியா.

(ii) பரீட்சார்த்திகள் தாங்கள் விரும்பிய இரண்டு ஸ்தானங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும். போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாத ஸ்தானங்கள் நீக்கப்படும்.

(iii) சாதாரணமாக பரீட்சார்த்தியால் முதன் முதல் தெரிவு செய்யப்பட்ட ஸ்தானத்தை மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது. போதிய அளவு அறிவித்தல் கொடுக்கப்பட்டதும் மிகவும் கஷ்டங்களையுடையதுமெனக்கருதப்படும் ஒரு விண்ணப்பம் மாத்திரம் அதன் தன்மைக் கேற்பக் கவனிக்கப்படும்.

6. **தகுதி**

**அ—பொது**

ஒரு பரீட்சார்த்தி,

(i) நன்னடத்தை உள்ளவராயிருத்தல் வேண்டும்.

(ii) இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.

(iii) 1965 ம் ஆண்டு ஜனுவரி மாதம் 1 ந் திகதியன்று 17 வயதுக்கு மேற்பட்டவராயும் 45 வயதுக்குக் குறைந்தவராயும் இருக்க வேண்டும்.

**முக்கிய குறிப்பு** :—அரசாங்க அல்லது வித்தியாதிபதியின் முகாமைப் பாடசாலைகளில் தற்போது சேவையிலுள்ள ஆசிரியர்களும் மாணவ ஆசிரியர்களும் மாத்திரமே இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பத்தை அனுப்பும் திகதி தொடக்கம் ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்படும் காலம்வரை தொடர்ச்சியாக ஆசிரியராகச் சேவை புரியாத பரீட்சார்த்தி, ஆசிரியர் ஒருவர் பெறக்கூடிய சலுகைகளையும் நன்மைகளையும் பெறுதற்கு உரித்துடையராகார்.

**ஆ—விசேட**

ஒரு பரீட்சார்த்தி,

(i) ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம் அல்லது ஆங்கில உதவி ஆசிரியர் தராதரப் பத்திரம் அல்லது சி.பா.த. பத்திரம் (ஆங்கிலம்) பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) சி.பா.த. பத்திரத்தில் பின்வரும் பாடங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல்வேண்டும். அல்லது இப்பாடங்களில் க. பொ. த. பத்திரப் பரீட்சையில் புறம்பாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஆங்கிலப் பாஷை (திட்டம் " அ ") அல்லது

ஆங்கிலப் பாஷை (திட்டம் " ஆ ") திறமைச் சித்தி

அல்லது ஆங்கில இலக்கியம்.

அல்லது

(iii) க. பொ. த. (சாதாரணதர)ப் பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத தருணங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(1) தமிழ்ப்பாஷை அல்லது சிங்களப்பாஷை.

(2) ஆங்கிலப்பாஷை (திட்டம் " அ ") அல்லது ஆங்கிலப் பாஷை (திட்டம் " ஆ ") திறமைச் சித்தி அல்லது ஆங்கில இலக்கியம்.

7. **பரீட்சைத் திட்டம்**

இப்பரீட்சை, எழுத்துப்பரீட்சையையும் நேர்முகப் பரீட்சையையும், கொண்டுள்ளது. எழுத்துப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு வித்தியாதிபதியினுல் அழைக்கப்படுவர்.

**எழுத்துப் பரீட்சை பின்வருமாறு** :—

(i) பொது விவேகம் : ஆங்கில—½ மணித்தியாலங்கொண்டது. 100 புள்ளிகள்.

(ii) ஆங்கிலப் பாஷையும் வியாசமும் : 1½ மணித்தியாலங்கொண்ட ஒரு வினாத்தாள். 200 புள்ளிகள்.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல்**

(i) இப்பிரமாணங்களின் பிரகாரம், தேவையான கட்டணத்துடன் விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

(ii) இப்பிரமாணங்களின்படி தகுதியுடையவர்கள் என்று விண்ணப்பம் அனுப்பும் பரீட்சார்த்திகளெல்லோரும் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். ஆனல் அவ்வாறு அனுமதிக்கப்பட்டமை அவர் அப்பரீட்சைக்குத் தகுதியுடையவரென்பதைக் குறிக்காது. ஒரு பரீட்சார்த்தி இப்பிரமாணங்களின்படி தகுதியற்றவரெனக் காணப்பட்டால் அவர் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ, பரீட்சையின் பின்னரோ, நேர்முகப் பரீட்சையின் போதோ, பயிற்சிபெறும் காலத்திலோ, பயிற்சி பெற்ற பின்னரோ நிராகரிக்கப்படலாம். அத்தகைய பரீட்சார்த்தியினது பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் பயனற்றதாக்கப்படுவதுடன் அவர் நேர்மையீனமாக நடந்து கொண்டதாகக் கண்டால் கற்பித்தற் றெழிலுக்காய எப்பரீட்சையையும் சீவியகாலம்வரை எடுக்கமுடியாதபடி தடுத்து வைக்கப்படுவர்.

9. **பரீட்சைக்கு விண்ணப்பித்தல்**

(i) இதில் பிரசுரிக்கப்பட்டுள்ள இப்பரீட்சைக்குரிய தமிழ் மாதிரிப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு விண்ணப்ப பத்திரத்தைத்தாமே ஆக்கி, நிரப்பி அனுப்புதல் வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இப்பகுதியால் விநியோகிக்கப்படமாட்டா.

(ii) விண்ணப்பப் பத்திரத்தை ஆக்கும்பொழுது பின்வருவனவற்றைக் கவனமாகவும், கட்டாயமாகவும் அனுசரித்தல் வேண்டும். இவற்றுள் எவையேனும் திருத்தமாகக் கொள்ளப்படாவிட்டால் விண்ணப்பப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

(அ) ஏறத்தாழ 8″ × 13″ அளவுகளைக் கொண்ட பாதி புல்ஸ்காப் தாளில் விண்ணப்பப் பத்திரத்தைத் தயாரித்தல் வேண்டும். வேறு தாள்களைப் பயன்படுத்தக்கூடாது.

(ஆ) தட்டச்சில் இப்பத்திரத்தை ஆக்கலாம். இப்பத்திரத்தைக் கைப்படச் செய்தால் கோடுகள் யாவும் சிவப்பு மையினுல் கீறிடப்படல் வேண்டும். கூடுகள் யாவும் நீலம் அல்லது கறுத்த மையினுல் நிரப்பப்படல் வேண்டும்.

(இ) கூடுகள் யாவும் சரியான ஒழுங்கு முறைப்படியும், உரிய பக்கப்படியும் கோடிடப்படல் வேண்டும். கூடுகளின் ஒழுங்கு முறையை மாற்றுதல்கூடாது. கூடுகள் தவருக விடப்படுதலும் கூடாது. சொற்கள் ஒன்றுக்குள் ஒன்று செருகாமலும், நெருக்கமாகாமலும், இருக்கக்கூடியவாறு இடம் பொருந்தியகூடுகளை கவனமாக ஆக்குதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப் பத்திரம் பூரணமாகவும், திருத்தமாகவும் நிரப்பப்படுதல்வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பம் அதன் தன்மைகளுக்கேற்ப பரிசீலனை செய்யப்பட்டு பரீட்சைக்கு முன்னர் நிராகரிக்கப்படலாம், அல்லது பரீட்சார்த்தியின் தகைமை பரீட்சைக்குப் பின்னர் நீக்கப்படலாம். பின்வருவனவற்றைப் பரீட்சார்த்திகள் அவதானித்தல்வேண்டும் :—

(அ) பதிவு செய்யப்பட்ட ஆசிரியர் பதிவுசெய்த அதே பெயர்களைத்தருதல் வேண்டும். ஏனையோர், அவர்களின் நன்மையைப் பொறுத்தவரையில், தமது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் உள்ளவாறு பெயர்களைத் தருதல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்தியின் கையொப்பம் தக்க பின்வரும் ஒருவரால் அத்தாட்சி செய்யப்படுதல் வேண்டும். சமாதான நீதவான், சத்தியப் பிரமாண அதிகாரி, வழக்கறிஞர், நொத்தாரிசு, அனுமதிக்கப்பட்ட ஒரு பாடசாலை அதிபர், தரைப்படை, கடற்படை, விமானப்படைகளிலுள்ள ஆணையிடப்பட்ட உத்தியோகத்தர், அரசாங்க சேவையில் 2,400/– ரூபாவுக்குக் குறைவில்லாத வருடச் சம்பளம் பெறும் நிரந்தர உத்தியோகத்தர்.

(இ) ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது தலைமை ஆசிரியர் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

(iv) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் **பதிவு செய்யப்பட்ட கடித மூலம் 1964 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ந் திகதி, வெள்ளிக் கிழமையன்று** அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக " வித்தியாதிபதி, ஆசிரிய கலாசாலைகள் கிளை, வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கியுள்ள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் " ஆங்கில

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை" என அடையாளமிடப் படுவதுடன் விரும்பும் பரீட்சை ஸ்தானத்தின் பெயரும் கொடுபட வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

(vi) விண்ணப்பங்களுடன் வேறு எவ்வித உறுதிப் பத்திரங்களும் அனுப்புதல் கூடாது.

10. **பிரவேசக் கட்டணம்**

பிரவேசக் கட்டணம் ரூபா 7.50 சதம். இக்கட்டணம் இறைவரி முத்திரைகள் மூலம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சார்த்தி பிரவேச விண்ணப்பப் பத்திரத்தில் இவற்றை ஒட்டி இவற்றின்மேல் கையொப் பத்தை இட்டு பயனற்றதாக்கவேண்டும். பயனற்றதாக்காமல் அனுப்பப் படும் முத்திரைகளுக்கு இக்கந்தோர் பொறுப்பு ஏற்காது.

11. **பிரவேச விண்ணப்பங்களை நிராகரித்தல்**

(i) பின்வரும் பிரவேச விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும் ; பரீட்சார்த்திகளும் அறிவிக்கப்படுவர்.

(அ) பூர்த்தியற்றதாகவோ, குறைபாடாகவோ, இப்பிரமாணங் களுக்கு அமையாததாகவோ உள்ளவை.

(ஆ) உரிய பிரவேசக் கட்டணப் பணம் இல்லாது இருப்பவை.

(இ) முடிவுத் தேதிக்குப் பின்னர் இக்கந்தோரில் கிடைப்பவை ; பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவரது பரீட்சைத் தன்மை நீக்கப்படும்.

(ii) விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால், அல்லது பரீட்சைத்தன்மை நீக்கப்பட்டால் பிரவேசக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது.

12. **பரீட்சையினின்று விலகுதல் அல்லது தோற்றுது விடுதல், பிரவேசக் கட்டணம் திருப்பிக் கொடுத்தல்**

(i) பரீட்சையினின்று விலகுதல் பற்றிய கோரிக்கை, பிரவேச விண்ணப்பங்கள் ஏற்கும் முடிவுத் தேதிக்கு முன்னதாக இப்பகுதியில் கிடைத்தால், கட்டுப்பணத்தின் 90 வீதப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

(ii) எக்காரணம் பற்றியும் பரீட்சைக்குத் தோற்றுமையுட்பட வேறு நியாயங்களுக்கு கட்டணப்பணம் முழுதாகவோ பகுதியாகவோ திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(iii) பரீட்சார்த்தியின் மரணத்தையோ அல்லது (காசநோய், பாரிசவாதம், மூளை அல்லது நரம்புக்கோளாறு என்பன போன்ற) கடுமையான நெடுங்கால சுகயீனத்தை உத்தேசித்து 90% கட்டணப்பணம் திருப்பிக்கொடுக்கப்படும். அங்ஙனமாயின் பரீட்சார்த்தி ஒரு பாடத்துக்கும் தோற்றுதவராய் இருத்தல் வேண்டும். இங்ஙனம் கட்டணம் திருப்பிப்பெறுதற்கான விண்ணப்பம் கூடியவிரைவில், பரீட்சைத் திகதிக்கு ஒரு மாதத்துக்குப் பிந்தாமல் செய்யப்பட வேண்டும்.

13. **பிரவேசப் பத்திரங்கள்**

(i) தபாலில் பிரவேசச் சீட்டுகள் அனுப்பியமைபற்றி பரீட்சைத் தினத்துக்கு ஏழு நாட்களுக்கு முன் வானொலியிலும் புதினப் பத்திரிகைகளிலும் அறிவிக்கப்படும். இவ்வறவித்தலைப் பரீட்சார்த்திகள் கவனித்து அதற்கமைய உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii) அறிவிப்பைப் பார்த்து, தம் பிரவேசச் சீட்டைப் பெறாத பரீட்சார்த்திகள் உடனே கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதியுடன் நேரிலேனும் தந்தி மூலமேனும், (தந்தி விலாசம் : கல்வி, கொழும்பு) அறிவிக்க வேண்டும் அவ்வாறு அறிவிக்கும்பொழுது பின்வரும் விபரங்களைக் கொடுக்க வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;

(3) பரீட்சார்த்தியினது தபால் விலாசம் ;

(4) பரீட்சைக்குத் தோற்றக் கோரிய பரீட்சை ஸ்தானங்கள் ;

(5) விண்ணப்பப் பத்திரம் அனுப்பிய தேதி, அதனைப் பதிவு செய்த தபாற் கந்தோர், பதிவிலக்கம்.

14. **அடையாளப் பத்திரங்கள்**

(i) எல்லாப் பரீட்சார்த்திகளும் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்துக் கும் தோற்றும்போது பரீட்சை மண்டபத்தில் உள்ள அதிகாரியை திருப்திப்படுத்தத் தக்கதாக தாம் இன்னாரென்பதை நிரூபிக்க வேண்டும். இதன் பொருட்டுப் பின்வரும் பத்திரங்களுள் ஒன்று அங்கீகரிக்கப்படும் :—

(அ) தபாற் பகுதித் தலைவர் அளிக்கும் அடையாளச் சீட்டு ;

(ஆ) பரீட்சை நிகழும் தேதிக்கு முன் மூன்று வருடங்களுக்குள் அளிக்கப்பட்டதும் உறுதியுள்ளதுமான வெளிநாட்டுப் பிரயாண அனுமதிச்சீட்டு ;

(இ) பரீட்சை நிகழும் தேதிக்கு மூன்று வருடங்களுக்குள் அரசாங்கப் பகுதியொன்றின் அதிகாரத்தால் அல்லது அரசினர் கூட்டுத்தாபனம் ஒன்றால் அல்லது சட்டப் படியுள்ள ஸ்தாபனத்தால் அளிக்கப்பட்டதும் பரீட் சார்த்தியின் புகைப்படத்தைக் கொண்டதுமான பத்திரம், உத்தரவுப் பத்திரம் அல்லது வேறு பத்தி ரம் ;

(ஈ) பாஸ்போட் அளவினதான ஒரு புகைப்படம். பிரவேசப் பத்திரத்தில் பரீட்சார்த்தியின் அடையாளம் பற்றி உறுதிப்படுத்தும் தகைமையுள்ளவர் இப்புகைப்படத் தின் பின்புறத்தில் பின்வருமாறு உறுதிப்படுத்தல் வேண்டும் :—

"இதில் கையொப்பமிட்ட பரீட்சார்த்தி ..........யின் (முழு பெயர்களும்)

படமே இப்புகைப்படமென்பதை அத்தாட்சிப் படுத்துகிறேன்.

| | |
|---|---|
| ........................... | ........................... |
| பரீட்சார்த்தியின் கையொப்பம் | உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் |

பெயர் : ...........................

அந்தஸ்து : ...........................

திகதி : ...........................

மேற்கூறப்பட்ட எவையேனும் ஓர் அடையாளச் சீட்டைக் கொண்டு வராத பரீட்சார்த்தியின் பரீட்சைத் தகைமை தற்காலிகமானது. அத்தகைமை வித்தியாதிபதியின் விரகின்படி நீக்கப்படலாம்.

15. **உறுதிப்பத்திரங்கள்**

(i) பின்வருவனவற்றின் சில அல்லது யாவும் தேவைப்படுவன வாகும் :—

(அ) இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்தமைக்கான அத்தாட் சிப்பத்திரம், அல்லது அதை நிரூபிப்பதற்காய உத்தி யோகபூர்வமான மூல அத்தாட்சிக் கடிதம் (தன்மைக் கேற்ப) ;

(ஆ) இலங்கைச் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம். (இது பெருத மாணவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளா யின் பெறுபேற்றிதழையும், பாடசாலைப் பரீட்சார்த் தியாயின் ஆசிரியரின் உறுதிக் கூற்றறிக்கையையும் இணைத்தல் வேண்டும். உறுதிக் கூற்றறிக்கையில் பின்வருவன கொடுக்கப்படல் வேண்டும். எல்லா முழுப் பெயர்களும், பரீட்சையும், வருடமும், மாதமும், சுட்டிலக்கமும், பாடங்களும், அவற்றின் தரங்க ளும் ;

(இ) இலங்கை கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதார ணதரம்) இப்பத்திரம் பெருதவர்கள் மேலே (ஆ) வில் கூறியபடி அத்தாட்சி உறுதிப்பத்திரம் அனுப்புதல் வேண்டும் ;

(ஈ) பிறப்புச்சாட்சிப் பத்திரம் அல்லது விசேட வயதுப் பத்திரம் பாடசாலைகளிற் சேர்வதற்கான விசேட பிறப்புச் சாட்சிப் பத்திரமோ, ஞானஸ்நானப் பத்திரமோ ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது. பிறப்புச்சாட்சிப் பத்திரத்திற்குப் பதிலாக சத்தியக்கடதாசிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா ;

(உ) பெயரில் மாற்றங்கள் இருந்தால் இதற்குச் சாதகமாக சத்தியக்கடதாசி பெற்றோரில் ஒருவரால் செய்யப்படல் வேண்டும். பெற்றோர் இல்லையெனின் 21 வயதுக்குமேற் பட்ட கிட்டிய சொந்தக்காரரில் ஒருவரால் இது செய்யப்பட வேண்டும். சத்தியக் கடதாசியில் இறைவரி முத்திரை ஒட்டத் தேவையில்லை.

(ii) உறுதிப் பத்திரங்களோ அவற்றின் பிரதிகளோ விண்ணப்பத் துடன் அனுப்பப்படக்கூடாது. பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது அவற்றின் நேர்முகப் பரீட்சைக் குழுவினரது பரிசோதனைக்குச் சமர்ப்பிப்பதற்கு ஆயத் தமாய் வைத்திருத்தல் வேண்டும். தேவையானதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான உறுதிப்பத்திரங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிப்பதன் மூலம் தமது தகுதியை நிரூபிக்கத்தவறும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

(iii) அறிவுறுத்தல்களைக் கவனியாது விண்ணப்பப் பத்திரத்துடன் சேர்த்து அனுப்பப்படும் ஒரு பரீட்சார்த்தியினது தராதரப் பத்திரங்கள் தவறிப்போனால் இப்பகுதி அதற்குப் பொறுப் பேற்காது.

(iv) ஒரு பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்படும் உறுதிப் பத்திரங் கட்கு அப்பரீட்சார்த்தியே பொறுப்பாளியாவர். மாற்றம்செய்யப் பட்ட அல்லது கள்ளத்தனமான அல்லது பொய்யான விபரங் களடங்கிய தராதரப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகள் தண்டனைக்குரியவராவர். அவர்கள் பரீட்சையினின்றும் விலக்கப்படுவதுடன், கற்பித்தல் தொழிலுக்காய எப்பரீட்சை யினையும் சீவியகாலம்வரை எடுக்கமுடியாதவாறு தடுத்தும் வைக்கப்படுவர்.

**16. பெறுபேறுகள்**

பரீட்சையின் (எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்ற இரு பிரிவின்) பெறுபேறுகளிலிருந்து பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு அவ்விபரம் தனித்தனியாக அறிவிக்கப்படும். உடல், மனமாகியவை சம்பந்தமான குறைபாடுடையோர் தேர்ந்தெடுக்கப்படமாட் டார். சித்தியெய்தியோர் நாமாவலிகள் பிரசுரிக்கப்படா; விபரமான அறிக்கைகளும் கொடுக்கப்படா. பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் சம்பந்தமான கடிதங்களை, "கிளை ரீ. சீ. வித்தியா பகுதி" என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். பரீட்சைப்பகுதிக்கு அனுப்பும் கடிதங்களுக்குப் பதில் அனுப்பப்படமாட்டாது.

**17. வேறு குறிப்புகள்**

இப்பிரமாணங்களிற் குறிப்பிடப்படாதவை எவையேனுமிருப்பின் வித் தியாதிபதியின் உசிதப்படி தீர்மானிக்கப்படும்.

ஈ. எச். டி அல்விஸ்,
வித்தியாதிபதி.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1964 ம் ஞூ ஜூலை மீ 11 ந வ.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**வித்தியா பகுதி**

**ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் (ஆங்கில) பரீட்சை, 1964**

சுட்டிலக்கம்
(கந்தோர் உபயோகத்துக்கு)
. . . . . . . . . . . . . . . . . . . .

| | |
|---|---|
| 1. (அ) பெயர் : (முதலெழுத்துக்களுடன் மட்டும்)<br>(ஆ) பிறந்த திகதி : | 4. கல்வித் தராதரங்கள் : |
| 2. (அ) எல்லா முழுப்பெயர்களும்:<br>(ஆ) சாதி : | 5. விரும்பும் பரீட்சை ஸ்தானம் :<br>(i) முதல் தெரிவு :<br>(ii) இரண்டாந்தெரிவு : |
| 3. விலாசம் : | 6. பால் : ("ஆ" அல்லது "பெ" எனக் குறிப்பிடவும்) |

7. அறிவித்தலின்படி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்பதையும் (ii) எனக்குத் தெரிந்தவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்பதையும் (iii) நானே இம்முத்திரைகளை ஒட்டினேன் என்பதையும் அவை ஏற்கனவே பயன் படுத்தப்படாதவையும் உண்மையானவையும் என்பதையும் உறுதிப்படுத்து கிறேன். மேலும் இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படியும், பரீட்சார்த்தி களுக்குரிய விதிகளின்படியும் கட்டுப்பட்டு ஒழுகுவேன் எனவும் சம்மதிக் கிறேன்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

திகதி : . . . . . . . . . . . . . . . . . . . .

8. முத்திரை ஒட்டுதற்கான இடம் :

குறிப்பு.—ரூ. 7.50 பெறுமதியுள்ள முத்திரைகளை ஒட்டி அவற்றின் மேல் விண்ணப்பிப்பவர் கையொப்பமும், திகதியுமிட்டு அவற்றைப் பயனற்றதாக்குதல் வேண்டும். முத்திரைகளை ஒன்றின்மேல் ஒன்று ஒட்டுதலாகாது.

[கீழே தரப்படும் பகுதி விண்ணப்பத்தின் மறுபக்கத்தில் இருத்தல் வேண்டும்.]

9. அடையாளத்தை உறுதிப்படுத்தல்.

மேலே கூறப்பட்ட பரீட்சார்த்தியை எனக்கு நன்கு தெரியும் எனவும், அவர் தம் கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிசெய்கிறேன்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணப்பிப்பவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் (தெளிவாக) :
அந்தஸ்து :
விலாசம் : திகதி :

7-617—17.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,108

## மத்திய எழுதுவினைஞர் சோதனை—செப்டம்பர், 1962

13,996 இலக்கமுடைய 1964 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26 ம் திகதி அரசாங்க செய்தி மடலில் பிரசுரிக்கப்பட்ட 1964 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ம் திகதியுடைய அறிவிப்பைத்தொடர்ந்து அறிவிப்பது என்னவென்றால் புகையிரதப்பகுதி எழுதுவினைஞர் சேவையின் பொது வகுப்பிற்கு நியமிக்க 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்பட்ட மத்திய எழுதுவினைஞர் சோதனையின் மறுமொழிப்படி கீழ்க்காணும் அபேட்சகர்களைத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது—

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1. | கமகே, டி. எஸ். | அனுத்கம, பண்டாரகம |
| 2. | கமகே, ஜீ. | "கமகேவத்தை" கொடப்பிட்டிய, அக்குரஸ்ஸ. |
| 3. | கருணதாசா, பி. ஜீ. | மத்தெய்க்கவத்தை, வெராகாடை, மீட்டியகொடை |
| 4. | கருணதாசா, எஸ். எல். | கராகொடை–உயங்கொடை 2, கம்புருபிட்டியா |
| 5. | குணதாசா, எம். எம். | புதியகம, வீரக்குட்டிய |
| 6. | குணரத்தின, என். கே. | டொலெபொல, மல்லல்பொல, யட்டியான்தோட்ட. |
| 7. | குணவர்தின, டி. எஸ். டி. எஸ். | 51/8, பேஸ்லைன் ரோட்டு, கொழும்பு 9 |
| 8. | குலதேவா, கே. டி. | மொரவக்க, நெலுண்டேனியா |
| 9. | கீர்த்திரத்தின, எச். பி. டி. | "தர்மசிரி", கொராசை, உடுகம்பல. |
| 10. | சந்திரபாலா, கே. டி. | அனுலா வண்டகசாலை, 9, பிரதான வீதி, கம்பகா |

| | பெயர் | | விலாசம் |
|---|---|---|---|
| 11. | சந்திரசேகரா, ஒ. | .. | 414, அனுத்கங்டொட்ட, மாவில்மடை, கண்டி |
| 12. | சந்திரசேன, எச். பி. | .. | பரணவத்தை, வார்க்கப்பிட்டியா, தெனிப்பிட்டியா |
| 13. | சிரிசேன, சி. | .. | ரெண்டபொலகண்டியா, மீரிகம |
| 14. | சிரிசேன, டபிள்யு. ஏ. | .. | எத்தனவத்தை, மகாவத்தியாலயம், மஸ்பொட்ட |
| 15. | சிரிசேன, கே. கே. | .. | “ரூப்பகெதர”, அக்குருகொட, கம்புருபிட்டியா |
| 16. | சிரிவர்தன, ஆர். ஆர். | .. | புவக்பத்தை, காமினிமாவத்தை, அக்குரஸ்ஸ |
| 17. | சோமச்சந்திரா, கே. எச். | .. | “நிர்மலா”, டோடம்பகால, டிக்வெல |
| 18. | சோமபாலா, டி. ஜே. | .. | டவுகலகம, ரத்தினபுரா |
| 19. | சொய்சா, டி. ஆர். டபிள்யூ. டி. | .. | 480/12, காலி வீதி, கொழும்பு 6 |
| 20. | சுகததாசா, டி. | .. | “சந்திரகிரியா”, பொம்புவல |
| 21. | சுமதிபாலா, எம். | .. | கடகத்தை, பொலகண்டியா, அம்பன்பொல. |
| 22. | சூரசிங்கா, வி. ஆர். | .. | குருவத்தை, திரணகம, இக்கடுவா |
| 23. | தண்வார்தன, ஜீ. ஏ. | .. | நீர்ப்பாய்ச்சல் அலுவலகம், கந்தளை |
| 24. | தேவித், எல். | .. | குடபன, கொமில–மாவரல, மாத்தறை |
| 25. | தயரத்தின, டபிள்யூ. எச். எம். | .. | பிரதீபகாரமாவத்தை, தெவிநுவர |
| 26. | தர்மசேன, எச். பி. | .. | ஈனகொடை, பண்டாரகம |
| 27. | தர்மவர்தன, ஆர். ஏ. டி. | .. | உக்கல்பொடை, உடுகம்பொல |
| 28. | திங்கிரி பண்டா, டபிள்யு. எம். | .. | எப். வர்சகோன் மேற்பார்த்து, கனதென, இங்குல |
| 29. | திலகரத்தின, வை. | .. | பகலகமா, தலாவ. |
| 30. | திசேரா, டபிள்யூ. எஸ். என். | .. | கோவில் வீதி, மட்டக்கொட்டுவா, மகாவேவ |
| 31. | பரணவித்தான, எஸ். | .. | பட்டபேண்டிமுல்லை, அம்பலாங்கொடை |
| 32. | பீரீஸ், பீ. சி. | .. | 57, தொட்டுப்பொல ரோட்டு, கொரக்கப்பொல, பாணந்துறை |
| 33. | பீரிஸ், பி. எச். | .. | 516/சி, பள்ளிமுல்லை, பாணந்துறை. |
| 34. | பிலிப், எச். டி. ஆர். | .. | ஓரக்கலை, மாதம்பை |
| 35. | பியசோமா, டபிள்யூ. | .. | பட்டபெண்டிமுல்லை, அம்பலாங்கொடை |
| 36. | பிரேமதாசா, எச். கே. | .. | பொரலுகொடை, மத்துகம |
| 37. | பிரேமரத்தின, பி. ஜீ. | .. | 219, பெளியத்தை வீதி, உனுபிட்டிய, வத்தளை |
| 38. | பிரேமசிரி, பி. எச். ஜீ. | .. | தங்காலை வீதி, பெலியத்தை |
| 39. | புல்லைபெருமா, டி. எல். எஸ். | .. | “சிசிரிசேவன”, கல்தும்பை, பண்டாரகம |
| 40. | புன்சிபண்டா, டி. எம். | .. | கெம்பினிகண்ட, பகலகம, பட்டம்பிட்டியா |
| 41. | பெரேரா, ஜி. எஸ். | .. | பதங்கிவத்தை, மொரன்டுவா |
| 42. | பெர்னாந்து, டி எஸ். | .. | அலுவகண்ட, பேருவல. |
| 43. | பெர்னாந்து, எப். ஜே. ஈ. | .. | 45, “பிளோரிடேல்”, செயன்டி, அந்தோனியார் வீதி கடலன, மொரட்டுவா |
| 44. | பெர்னாந்து, எல். டி. | .. | 32/9, செயின்ட், செபஸ்டியன் வீதி, அத்துக்கல, நீர்கொழும்பு |
| 45. | பெர்னாந்து, டி. டி. என். | .. | 209, “ராமியா” கொரல்லவல, மொரட்டுவா |
| 46. | பெர்னாந்து, யு. பி. டபிள்யு. | .. | 52/2, லக்சபத்தியா ஒழுங்கை, மொரட்டுவா |
| 47. | பிரான்சிஸ், கே. ஏ. | .. | கொடித்துவக்கு ஓவித்தை, திபோட்டுவேவா, அக்குரஸ்ஸ |
| 48. | பண்டாரநாயகா, எச். எம். | .. | பொலன, கலுகமுவா |
| 49. | பந்துசேன, ஜே. ஏ. | .. | பலனருவா, கொணப்பொல, இலக்கம் 31 |
| 50. | பந்துசேன, எஸ். | .. | தலல்ல தெற்கு, கந்தார |
| 51. | பிலேக், ஆர். டபிள்யூ. | .. | 50, நாககமுல்லை வீதி, கொலோன்னாவா, வெல்லம்பிட்டியா |
| 52. | ரத்நாயக, ஆர். | .. | அலகல்ல, பெடாவெல, |
| 53. | லீலரத்தன, ஏ. டபிள்யு. ஜீ. | .. | கோவில் வீதி, அகங்கமா |
| 54. | லெனத், எம். எச். | .. | 3/362, துவத்த, தங்கெதர, காலி |
| 55. | விஜிதசிரி, டி. டபிள்யு. | .. | கலகம, இந்துருவா |
| 56. | வீரசூரியா, எஸ். டபிள்யு. | .. | பிரன்ஸிஸ்கு மாவத, மொரட்டுவ |
| 57. | விக்கிரமதிலக, ஜீ. பி. | .. | 570, போகாவத்தை, கலபலனகந்தை, அவிஸ்ஸாவலை |
| 58. | விஜயரத்தின, சி. | .. | 180, டாம் வீதி, கொழும்பு 12 |
| 59. | விஜயவார்தன, டி. டி. | .. | கொலம்பயவத்தை, வித்தியாலயம், மலிடுவா, பூஸ்ஸா |
| 60. | விமலசேன, கே. டபிள்யு. | .. | முதல்கட்டையடி, குடாகல, எல்பிட்டியா |
| 61. | ஜயரத்தின, ஆர். ஈ. | .. | 9, தரலுவா, பெம்முல்ல |
| 62. | ஜயசிங்கா, எஸ். ஏ. டி. | .. | கொதுருவாவல, நாரங்கொட, கிரியுல்ல |
| 63. | ஜயசிங்கா, எல். எல். | .. | கல்பிகில்லல, பண்வில |
| 64. | ஜயதிலகா, எம். பி. | .. | ஓலிதிரினித்தி வித்தியாலயம், நுவரெலியா |
| 65. | ஜினதாசா, டி. ஜீ. | .. | கனத்தை, மெடயாங்கொடை, யற்றியான, மாத்தறை |
| 66. | மல்கோம், ஜீ. வி. | .. | தந்துவனவில, யக்கமுல்லை |
| 67. | மானெல்காமி, ஜே. எச். | .. | வீரம்புவா, உடபடவா |
| 68. | மார்டின்சிங்கோ, ஜே. ஏ | .. | மொரவத்தை, ருவன்வல |
| 69. | மோகொட்டி, ஜே. டபிள்யு. ஜே. | .. | கடவடுவா, யற்றியன, மாத்தறை |
| 70. | முடியான்சே, ஏ. ஏ. | .. | 135, கொடவல, பொல்காவலை |
| 71. | அபயசிங்க, ஏ. டி. வி. | .. | “திசவில”, இக்கடுவா |
| 72. | அபயசிங்க, ஏ. டபிள்யு. | .. | “உதயகிரி”, காற்றப்பிட்டியா, கம்பளை |
| 73. | அல்விஸ், ஏ. வி. | .. | மதல்கமுவா, உடுகம்பொல |
| 74. | அமரவான்சா, எம். ஏ. | .. | 2ஏ, விஜயா வீதி, கொலன்னாவ, வெல்லம்பிட்டியா |
| 75. | அப்புகாமி, எச். ஏ. | .. | அகரபட்டியா, மொரகன்னஹகமா, கினிகத்தகேன |
| 76. | உடுவில்லாராச்சி, எச். | .. | நிந்தான, பட்டப்பொல |
| 77. | கெட்டி ஆராச்சி, வை. | .. | சிசிற, சிறிதர்மாராம ரோட், வேகரகம்பிற்ற, மாத்தறை |

2. இவ்வபேட்சகர்களுக்கு உடனே நியமனங்கள் கொடுக்க அரசாங்கம் பொறுப்பேற்கமாட்டாது. ஆனால் காலி இடங்கள் வர நியமனங்கள் கொடுக்கப்படும். நியமனங்கள் மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் நிலையில் வைத்திருக்கப்படும். இவர்கள் வைத்திய பரிசோதனைக்கும் புகையிரதப் பகுதி எழுதுவினைஞர் சேவை நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவராவர்.

3. அபேட்சகர்களுடன் நேரடியாகப் புகையிரதப்பகுதித் தலைவர் தொடர்பு கொள்ளுவார்.

பொது திறைசேரி, கொழும்பு,
1964 ம் ஜுலை மீ 3 ந் உ.

கீர்த்தி வீரக்கொடி,
பிரதி திறைசேரி காரியதரிசிக்காக.

7–649—17.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,108

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### வவுனியா உப பிரிவு

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வட பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு ஆவணி மாதம் 11 ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தொகைகளுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | பதிவுத்தொகை | செலுத்தவேண்டிய கேள்விக் கட்டணத் தொகை |
|---|---|---|
| (அ) வாரியுடையார் இலுப்பைக்குளத் திருத்த வேலை .. | ரூபா 23,000 ம் அதற்கு மேலும் .. | ரூபா 25 |
| (ஆ) சின்னப்பரந்தன் குளத்திருத்த வேலை .. | ரூபா 39,000 ம் அதற்கு மேலும் .. | ரூபா 50 |

இக்கேள்விக்குரிய வெற்றுப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு ஆவணி மாதம் 5, 6, 7 ந் தேதிகளிற் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இப்போது இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன் படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் மேற் குறிப்பிடப்பட்ட தொகை கேள்விக்கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும் அல்லது இக்கட்டணம் ஏதாவதொரு கச்சேரியில் செலுத்தப்பட்டு அதற்குள்ள பற்றுச்சீட்டுக்காட்டப்பட்டாலும் போதுமானது.

இக் கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. குமாரசாமி,
நீர்ப்பாசனப் பொறியியலாளர் வவுனியா,
உப-பிரிவு.

வவுனியா,
1964 ம் ஆண்டு ஜூலை மீ 6 ந உ.

7–445—17.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,108

## நீர்ப்பாசன இலாகா

### கொழும்பு உப பகுதி

மேற் பெரும் பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்களால் (விலாசம் :— கொட்டா ரோட், கொழும்பு 8) 11.8.1964 ம் ஆண்டு செவ்வாய்க்கிழமை முற் பகல் 10 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் கீழ்க்காணும் வேலை களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் பெயர் | பதிவு செய்யப்பட் டிருக்க வேண்டிய தொகை ரூபா | கட்டுமான பணத் தொகை ரூபா |
|---|---|---|
| 1. கொறத்தொட்ட சிறு வெள்ளத் தடுப்பு கட்டுமானம் | 49,000 அல்லது கூடிய தொகை | 100 |
| 2. அனுராகொடை அணைக்கட்டு .. | 44,000 ,, .. | 100 |
| 3. அக்குருமுள்ள ஓய அணைக் கட்டு | 17,000 ,, .. | 50 |
| 4. ஆண்டியம்வளம அணைக்கட்டு .. | 23,000 ,, .. | 50 |

குறிக்கப்பட்ட தொகைக்கோ அல்லது கூடிய தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடம் இருந்து மாத்திரம் மனுப் பத்திரங் கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. வெற்றுக் கேள்விப் பத்திரங்கள் கொழும்பு உப பகுதி இஞ்சினியர், (விலாசம் : ஜாவத்தை ரோட், கொழும்பு 5) அவர்களிடம் இருந்து 7.8.1964 ம் ஆண்டு வெள்ளிக்கிழமை வரையும் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். வெற்றுக் கேள்விப் பத்திரங்களுக்கு மனுச் செய்யும் பொழுது தங்களுடைய பதிவுப் புத்தகங்களையும், தற்போது தாங்கள் செய்யும் வேலைகளையும், அவையின் பெறுமதியையும், கேள்விக் காரர் அருகதை உடையவர்களா என்று கணித்துக் கொள்ளும் பொருட்டு உப பகுதி நீர்ப்பாசன இஞ்சினியர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3. மேலும் மேற் கூறிய பிரகாரம் பெற்றுக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படுமுன் குறிக்கப்பட்ட கட்டுமானப் பணம் இஞ்சினியர் அவர் களுக்கோ அல்லது ஏதாவது கச்சேரியில் கட்டிய அத்தாட்சி பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்.

4. வேலைகளைப் பற்றிய கூடிய விபரங்கள் கொழும்பு உப பகுதி நீர்ப் பாசன இஞ்சினியர் காரியாலயத்தில் இருந்து அறியலாம்.

ஜி. தெ. பி. குணவர்தன,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
கொழும்பு உப பகுதி.

நீர்ப்பாசன இலாகா,
ஜாவத்தை ரோட், கொழும்பு 5.

1964 ம் ஆண்டு ஜூலை மீ 4 ந உ.

7–525—17.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,108

## சுகாதார திணைக்களம்

### சாமான்கள் ஏற்றி இறக்குதல்

1964 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 30 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள புகையிரத நிலையங்களிலிருந்து மருத்துவ நிலையங்களுக்கு சாமான்கள் ஏற்றி இறக்குவதற்குரிய தும் வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகள் இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்தும் புத்தளப் பிரிவு சுகாதாரசேவை அத்தியட்சகர் கீழே குறிக்கப்படும் அட்டவணையிலுள்ள திகதிகளில் காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்வார்.

2. கீழே குறிக்கப்பட்ட திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாய் இருக்கலாம். சமூகமாய் இருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகை களும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது என் அதிகாரப் பிரதி நிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியும் நுணிந்தாய அனுமதிக்கப்படுவார்.

3. கேள்விப்பத்திரங்கள் அநுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாக்கல், மாத்தறை, வவுனியா, இரத்தினபுரி, புத்தளம் ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல்நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணம் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று அவற்றை கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப் பிக்கவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன், கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதாரசேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 3 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூ பணத்தையோ நேரத்துக்கு கொடுக்கத்தவறினால் கேள்விப் பத்திரம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

5. எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், புத்தளம் என்ற முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல்மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக் குள் போடலாம். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம், அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

6. கேள்விக்காரர்கள், கீழ்க்காணும் நிபந்தனைகளைக் குறிப்பாக கவனித்தல் வேண்டும் :—

(அ) ½ மைலும் அதுக்குக் கூடிய தூரமும் 1 மைலாகக் கணக்கிடப்பட்டு அதுக்குரிய கூலி கொடுக்கப்படும். ½ மைலுக்கு குறைந்த தூரத் துக்கு உண்மையாகக் கடந்த தூரத்துக்கே கூலி கொடுக்கப்படும் ;

(ஆ) 1 தொன்னுக்குக் கூடிய பாரமுள்ள சாமான் ஏற்றி இறக்கினால் மாவட்ட காரியாதிகாரி சிபார்சு செய்யும் தொகையின்படியே அதற்குரிய கூலி வழங்கப்படும் ;

(இ) விண்ணப்பம் பாரம் எடுத்தபின் திறக்கப்படும் மருத்துவ நிலையங்களுக்கு ஏற்றியிறக்கும் சாமான்களுக்குரிய தொகை மாவட்ட காரியாதிகாரியின் தொகையின்படியே கூலி வழங்கப்படும்.

7. கேள்வி நிபந்தனைகள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின் புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைக்கிணங்க நடத்தல் வேண்டும்.

8. மற்றைய எந்த விபரங்களையும் புத்தளம் பகுதி சுகாதார சேவை அத்தியட்சகருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். எந்த ஒரு விண்ணப்பத்தையோ அல்லது எல்லா விண்ணப்பங்களையுமோ எக்காரணமும் கொடுக்காமல் நிராகரிக்கும் உரிமை சுகாதார திணைக்களத்துக்கு உண்டு.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
புத்தளம்,
1964 ம் ஸ்ரீ ஜூலை மீ 9 ந உ.

வி. அ. பொன்சேகா,
சுகாதார சேவை அத்தியட்சகர், புத்தளம்.

### மேற்கூறப்பட்ட அட்டவணை

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| சேவை | கேள்விப்பத்திர கட்டுப்பணம் | பிணை வைப்புப் பணம் | முடிவு திகதி |
| | ரூ. ச. | ரூ. ச. | |
| கீழ்க்காணும் புகையிரத நிலையங்களிலிருந்து, மருத்துவ நிலையங்களுக்கு மருந்துச் சாமான்கள் ஏற்றி இறக்கல் | | | |
| (அ) பிரிவு : புத்தளம், பாலாவி, முந்தல் .. .. .. | 100 0 | 300 0 .. | 31.7.1964 10 மணிக்கு |
| (ஆ) பிரிவு : போலவத்தை, லுனுவில, நாத்தாண்டிய, குடவீவ, மாதம்பை, சிலாபம், பங்கதேனியா, பத்துலு ஓயா .. .. .. | 100 0 .. | 400 0 .. | ஷை |
| (இ) பிரிவு : கல்கமுவ .. .. .. .. | 100 0 .. | 200 0 .. | ஷை |

7-488/1—17.7.64 ந திகதிய வர்த்தமானி இல. 14,108

## சுகாதார திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பசும் பால் வினியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1964 ம் ஆண்டு அக்டோபர் 1 ம் திகதி தொடக்கம் 1965 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 30 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ளகாலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் சுகாதார அலுவலகங்களிலிருந்து ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து புத்தளப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. **(i) கேள்விக்கட்டுப்பணம்.**—ரூ. 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது என் பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டு பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**(ii) கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள், அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப்பணம் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—இத்திணைக்களத்துடன் ஒப்பந்தம் கொண்டிராதவர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கு முன், கேள்விகள் முடிவடையுந் திக்திக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகப்படவேண்டிய பொருட்களின் உத்தேசத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன், சுகாதார சேவை அத்தியட்சகர், புத்தளம் என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும், கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது பதிவுத் தபால்மூலம் அனுப்பலாம், அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு எந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்புப் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

10. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேணடும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய விபரங்களையும் புத்தளப்பகுதி சுகாதார சேவை அத்தியட்சகருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
புத்தளம்,
1964 ம் ஞூ யூலை மீ 9 ந உ.

வி. அ. பொன்சேகா,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
புத்தளம்.

### மேல்கூறப்பட்ட அட்டவணை

| | சேவை | பிரிவு | மாதாந்த உத்தேசத் தொகை பயின்ற் | கேள்வி மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|
| 1. | சிலாபம் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலிருந்து, அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு .. .. .. | சிலாபம் .. | 9500 .. | 31.7.64 |
| 2. | மாறவில்ல சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலிருந்து, அவ்வதிகாரியின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்கட்கு .. .. .. | மாறவில்ல .. | 7500 .. | 31.7.64 |

7–488/2—17.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,108

## சுகாதார திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### வவுனியா பகுதி—பசும் பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1964 ம் வருடம் ஐப்பசி மாதம் 1 ம் திகதி தொடக்கம், 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து வவுனியாப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக் கொள்வார்.

2. (அ) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள், அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களில் கேள்விகள் முடியும் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்குமுன் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப்படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களுடன் கேள்விக் கட்டுப் பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—இத்திணைக்களத்துடன் ஒப்பந்தம் கொண்டிராதவர்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்குமுன் கேள்விகள் முடிவடையுந்திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும். 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு அலுவலகத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிருபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்கவேண்டும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 3 ம் எழுத்துப் பந்தியில் விநியோகிக்கப்படவேண்டிய பொருட்களின் உத்தேச தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், வவுனியா, என்று முகவரி இடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் கீழ்மூலையில் அனுப்புவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளை இந்த அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டிக்குள் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது இவ்வலுவலகத்தின் செயலாளர்/கணக்காளர் கையில் கொடுத்துப் பற்றுச் சீட்டுப்பெற்றுக் கொள்ள வேண்டும்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ்க்காணும் அட்டவணையின் 4 ம் எழுத்துப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியைத் நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம்பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளவர் எந்த ஒரு கேள்வியின் இணைப்படியும் நுணித்தாய அனுமதிக்கப்படுவர்.

8. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்டுள்ள வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பது போல் ஒப்பந்தம் செய்யப்பட்டகாலம் வரையும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ் நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

9. **பிணைவைப்பும் பணம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்கள் தேவையான பிணைவைப்புப் பணத்தைக் கட்டிய பின்னரே ஒப்பந்தத்தில் கைச் சாத்திடவேண்டும்.

10. **கேள்விகள் நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

11. **மற்றைய விபரங்கள்.**—மற்றைய எந்த விபரங்களையும் வவுனியாப் பகுதி சுகாதாரசேவை அத்தியட்சருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்,
வவுனியா, 1964 ம் ௵ ஜூலை ௴ 11 ந உ.

க. சிவஞானரத்தினம்,
சுகாதாரசேவை அத்தியட்சகர், வவுனியா.

### மேல் கூறப்பட்ட அட்டவணை

| சேவை | பிரிவு | மாதாந்த உத்தேசத் தொகை | கேள்விமூடப் படும் திகதி |
|---|---|---|---|
| வவுனியா புகையிரத நிலையத்திலிருந்து சுகாதார வைத்திய அத்தியட்சகர் அலுவலகத்திற்கும் பின்பு அங்கிருந்து வவுனியா சுகாதார வைத்தியரின் பகுதியிலுள்ள பால் ஊட்டு நிலையங்களுக்கும் :— | | | |
| I ம் பிரிவு 3 பால் ஊட்டும் நிலையங்கள் .. | வவுனியா .. | 930 .. | 12.8.64 |
| II ம் பிரிவு 5 பால் ஊட்டும் நிலையங்கள் .. | ஷை .. | 1,410 .. | ஷை |
| III ம் பிரிவு 5 பால் ஊட்டும் நிலையங்கள் .. | வவுனியா .. | 1,500 .. | ஷை |
| மாங்குளம் புகையிரத நிலையத்திலிருந்து முல்லைத்தீவு சுகாதாரவைத்திய அத்தியட்சகர் அலுவலகத்திற்கும் முன்பு அங்கிருந்து முல்லைத்தீவு சுகாதார வைத்தியரின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் | முல்லைத்தீவு .. | 6,750 .. | 12.8.64 |
| மன்னார் புகையிரத நிலையத்திலிருந்து, மன்னார் சுகாதாரவைத்திய அத்தியட்சகர் அலுவலகத்திற்கும் பின்பு அங்கிருந்து மன்னார் சுகாதார வைத்தியரின் பகுதியிலுள்ள பால் ஊட்டும் நிலையங்களுக்கும் .. | மன்னார் .. | 9,720 .. | 12.8.64 |

7-596—17.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,108

### கல்விப் பகுதி

(1) கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலை சம்பந்தமாகக் கேள்விப் பத்திரங்கள் அக்கரைப்பற்று கல்விக் காரியாலய கேள்விச் சபைத் தலைவரால் 1964 ம் ஆண்டு ஜுலை மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| அக்/அட்டாளைச் சேனை அரசினர் முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை .. | .. பெருந்திருத்த வேலை |

(2) இவ்வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் கல்வி இலாகாவினாலும், பகிரங்க வேலை இலாகாவினாலும் கீழே குறிக்கப்பட்டுள்ள தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக் காரர்களுக்கும், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும், கூட்டுறவுத் தொழிற் சங்கங்களுக்கும் வழங்கப்படும்.

**குறிப்பு.**—கல்விப்பகுதி ரூபா 6,000.

பகிரங்க வேலைப்பகுதி ரூபா 6,000.

ஒவ்வொரு வேலைக்கும் கிழக்குப் பிராந்திய உதவி வித்தியாதிபதி கந்தோரிலும் அல்லது வெளியூராகில் அப்பகுதிக் கச்சேரியிலோ ரூபா 100 பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச்சீட்டை அக்கரைப்பற்று கல்வி அதிகாரி அவர்களிடம் சமர்ப்பித்துக் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

1964 ம் ஆண்டு ஜுலை மாதம் 30 ந் திகதி பி. ப. 12.00 மணி வரையுமே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். காசோலைகள், மணியோடர்கள், போஸ்றல் ஓடர்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(3) கேள்விப் பத்திரங்கட்குப் பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரங்கள் அக்கரைப்பற்று கல்வி அதிகாரி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்டதாக அத்தாட்சி சமர்ப்பித்தவர்கட்கு மட்டுமே பிணைப்பணம் கட்டு வதற்கான பத்திரம் வழங்கப்படும்.

(4) பதிவு செய்த தபால் மூலம் அனுப்பவிரும்பாத உள்ளூர் விண்ணப் பக்காரர்கள் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப் பத்திரங்களை அக்கரைப்பற்று கல்விக் காரியாலய உதவியாளரிடம் சேர்ப்பித்து அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு அத் தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின் மீது வேலையின் விபரங்களும் விண்ணப்பக்காரர் பெயரும் விலாசமும் எழுதப்படவேண்டும். அக்கரைப் பற்றுக் கல்விக் காரியாலயத்தில் இவ்வேலைகட்குரிய படங்களும் மற்றும் விபரங்களும் பார்வையிடலாம்.

(5) 1964 ம் ஆண்டு ஜுலை மாதம் 31 ந் திகதி பி. ப. 2.30 மணிக்கு விண்ணப்பப் பத்திரங்கள் பரிசீலனை செய்யப்படும். கேள்விப் பத்திரங் களைத் திறந்து பார்வையிடும்போது விண்ணப்பக்காரர் பிரசன்னமாய் இருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமாயிருக்கும் விண்ணப்பக்காரர் களுக்கு விண்ணபத்தொகைகளும், விண்ணப்பக்காரர்களின் பெயர்களும் களும் வாசித்துக் காட்டப்படும்.

(6) விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறுவாரங்கள் வரையி லுமே விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும்.

(7) இவ்வேலைகள் செய்யப்படும்பொழுது இலங்கையரும் குறிப்பிட்ட வேலை நடக்கும் பிரதேசத்தில் வசிப்பவருமான வேலையாட்களையே அமர்த்தவேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகச் சேர்க் கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின் படி ஒழுகத்தவறினால் அத்தவறு ஒப்பந்தச் சரத்துக்களை மீறியதாகக் கருதப்பட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படக்கூடும். எனினும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் கல்வி அதிபர், கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் சம்மதத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கைய ரல்லாத வேலையாட்களையே அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையே அமர்த்துவதற்கு அனுமதி யளிப்பர். இந்த அனுமதியில்லாமல் இலங்கையரல்லாத வேலையாட் களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசி யான வேலையாட்களையோ வேலைக்கமர்த்துவது தவிர்க்கப்பட்டுள்ளது.

(8) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் ஓடுகள் பாவிக்கவேண் டிய கட்டிடங்கட்கு உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட நவீனரக ஓடுகளையே பாவிக்கவேண்டும். கட்டிட மேற்பார்வையாளரிடம் உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட ஓடுகள் நல்ல ரகத்தில் பெறமுடியாதென அத்தாட்சிப் படுத்தினாலன்றி வேறு எவ்வித ஓடுகளும் பாவிக்க அனுமதி அளிக்கப் படமாட்டாது. ஓடுகளின் தராதரத்தை நிட்சயப்படுத்த வேண்டிய சோதனை கள் இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி கூடத்தின் விண்ணப் பக்காரர்கள் செலவில் நடத்தவேண்டும். இதுமாத்திரமன்றி, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் தாங்கள் உபயோகிக்கவிருக்கும் ஓடு, கல், சிலவற்றையும் அவ்வோடுகள் சகல பிரமாணங்களுக்கும் அமை வாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கு அத்தாட்சியாக இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி கூடத்தில் அத்தாட்சிப் பத்திரம் ஒன்றையும் சமர்ப்பித்து மேற்பார்வையாளர்களின் அங்கீகாரம்பெற வேண்டும்.

எம். எஸ். எம். ஹத்தாத்,
வித்தியாதிகாரி,
அக்கரைப்பற்று.

கல்விக் காரியாலயம்,
அக்கரைப்பற்று,
1964 ம் ஆண்டு ஜுலை மீ 10 ந் உ.

7-561—17.7.64 ந் தேதிய வர்த்தமானி இல. 14,108

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### அரசினர் நுண்கலைக் கல்லூரி

**மாணவர்களால் உற்பத்தி செய்யப்பெற்ற பொருட்கள் ஏல விற்பனை**

இக் கல்லூரி மாணவர்களால் உற்பத்திசெய்யப்பெற்ற கயிற்றுப் பாண்டங் கள், பிரம்பு, மரம், முதலியவற்றால் ஆக்கப்பெற்ற பொருட்களும், சிற்ப உருபங்கள், மட்பாண்டங்கள், வர்ணனை தீட்டப்பெற்ற துணிவகைகள் ஆதிய பொருட்கள் 1964.8.4 ம், 5 ம் திகதிகளில் காலை 10 மணிக்கு, ஹோர்டன் பிளேஸ் 46 இலக்கங்கொண்ட அரசினர் நுண்கலைக்கல்லூரி யில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

விற்பனைக்கு இருக்கும் பொருட்கள் யாவும் ஏலவிற்பனை ஆரம்பமா வதற்கு 1 மணி நேரத்துக்கு முன்னதாக பரிசீலனை செய்து கொள்ள முடியும்.

காமினி விஜயவர்தன,
பதில் அதிபர்,
அரசினர் நுண்கலைக் கல்லூரி.

7-526—17.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,108

---

### வனபரிபாலனக் காரியாலயம்

**மரங்கள் ஏல விற்பனவு**

1964 ம் ஆண்டு யூலை மாதம் 28 ந் திகதி (28.7.64) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் அரசினர் ரெக்காலையில் 22 கூறுகளைக் கொண்ட 114 பாலை, காட்டாமணக்கு, யாவரணை (1326.5 கன அடி) மரங்கள் வட வனபரிபாலன அதிகாரியால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பிரிவு வனபரிபாலனக் காரியாலயம்,
யாழ்ப்பாணம், 1964 ம் ஆண்டு ஜுலை மீ 3 ந் உ.

மு. சண்முகம்பிள்ளை,
வட வனபரிபால்ன அதிகாரி, யாழ்ப்பாணம்.

7-640—17.7.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,108

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

***அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.***

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.